# அலகு - V - படைப்பாற்றல்

## 1. கற்பனைச் சந்திப்புகள் :

(அ). [எ-கா] வாரியாரும் பெரியாரும், பொற்கைப் பாண்டியனும் மனுநீதிச் சோழனும், கக்கனும் காமராசரும், காந்தியடிகளும் இன்றைய அரசியல் தலைவர்களும், கட்டபொம்மனும் ஜாக்சன் துரையும், வின்சென்ட் சர்ச்சிலும் காந்தியும், அப்துல் காலாமும் நெல்சன் மண்டேலாவும், வேலுநாச்சியாரும் இந்திரா காந்தியும், சுபாஷ் சந்திரபோசும் விவேகானந்தரும், கட்ட பொம்மனும் திருப்பூர் குமரனும்.

## 2. நெருக்கடி நிலைமைகளைத் திறமையாகக் கையாளுதல்

(ஆ) [எ-கா] வெளியூர் பயணம் : பயணச்சீட்டு கிடைக்காத நிலையில் வரும் நெருக்கடி, கல்வி நிலையம் : விரும்பிய பட்டப் படிப்பில் சேர முடியாத நிலையில் வரும் நெருக்கடி.

3\. 1. பல்வகை விண்ணப்பங்கள் [அலுவலக நிலை]

2\. பல்வேறு மடல்கள் [பொதுவான நிலை]

# 1. (அ) கற்பனைச் சந்திப்புகள்.

மகாகவி பாரதியாரும் புரட்சிக்கவி பாரதிதாசனும் சந்தித்து உரையாடுகிறார்கள். அப்போது.....

பாரதிதாசன் : ஆஹா! எனக்கு இன்று என்ன அதிர்ஷ்டம்! மகாகவியை நேரில் சந்திக்கின்றேன். வணக்கம் மகாகவி! நான் உங்கள் கவிதைகளைப் படித்து ரசித்திருக்கிறேன்.

பாரதியார் : வணக்கம் புரட்சிக்கவி. உன் கவிதைகளையும் பாடல்களையும் நான் கேட்டு மனம் மகிழ்ந்திருக்கிறேன்.

பாரதிதாசன் : நாட்டு விடுதலை, பெண் விடுதலை, சமூக விடுதலை ஆகியவற்றையொட்டி நீங்கள் எழுதிய கவிதைகளைப் படித்துத்தான் நானும் இச்சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று கவிதை எழுதத் தொடங்கினேன்.

பாரதியார் : மிக்க மகிழ்ச்சி! நீ உனது வாழ்நாளில் என்னைவிட அதிகம் செய்திருக்கிறாய் பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் கவிதை படைத்திருக்கிறாய். அதுவும், பெண்ணுரிமை குறித்துப் பல கவிதைகளை எழுதியிருக்கிறாய்

பாரதிதாசன் : மகாகவி நீங்கள் தானே முன்னோடி பாரதியின் புரட்சிப் பெண்ணை அறியாதார் உண்டோ!

பாரதியார் : நாட்டு விடுதலை எவ்வளவு முக்கியமோ அதே போன்று சமூக விடுதலையும் முக்கியமானது.

பாரதிதாசன் : நீங்கள் சொல்வது சரிதான் மகாகவி! வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில் மானிடர் வேற்றுமை இல்லை!

பாரதியார் : ஆம் புரட்சிக்கவி! ஜாதி, மதம், நிறம் ஆகிய எதையும் பார்க்காமல் அனைவரும் சேர்ந்து வாழ்வதே உலகம் பயனுற வழியாகும்.

பாரதிதாசன் : உலகில் போரும் பூசலும் இல்லாமல் வாழ்வதற்கு இதைவிட சிறந்த வழியேது? நன்றி மகாகவி நான் விடைபெறுகிறேன். மீண்டும் உங்களைத் தமிழ்மொழி விழாவில் சந்திக்கிறேன். வணக்கம் மகாகவி!

பாரதியார் : வாழ்த்துகள் புரட்சிக்கவி!

## 2. ஆ. நெருக்கடி நிலைமைகளைத் திறமையாகக் கையாளுதல்

1. உயர்கல்வி அல்லது நேர்முகத் தேர்வு நிமித்தமாக வெளியூர் செல்ல நேரிடும் பொழுது பயணச் சீட்டுக் கிடைக்காத நிலை ஏற்படுமாயின் அந்தச் சூழலை நீ எங்ஙனம் திறமையாகக் கையாளுவாய் என்பதனை எழுத வேண்டும்.

2. நோய் தொற்று காலங்களில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியினை எங்ஙனம் திறமையாகக் கையாளுவாய் என்பது பற்றி எழுத வேண்டும்.

3. விரும்பிய பட்டப்படிப்பில் சேர முடியாத நிலையில் வரும் நெருக்கடி நிலையினை கையாளும் விதம் குறித்து எழுத வேண்டும்.

4. இரவு பொழுது வீட்டிற்கு வரும் விருந்தினர் அல்லது உறவினரை உபசரிப்பதில் நெருக்கடியான சூழலை எங்ஙனம் நீ சமாளிப்பாய் என்பது பற்றி எழுத வேண்டும்

இவ்வாறு பல்வேறு பொருண்மைகளில் நெருக்கடி நிலையினை கையாளுதல் குறித்து எழுத வேண்டும்.

## 3. 1. பல்வகை விண்ணப்பங்கள் [அலுவலக நிலை]

1. கோவை நகரிலுள்ள நிறுவனம் ஒன்றில் எழுத்தர் பணி [வேலை] தருமாறு வேண்டி விண்ணப்பம்.

கோவை - 5
20 - 10 - 2020

அனுப்புநர்

செ. சாதனா.
20, பாரதி நகர்,
இராமநாதபுரம்,
கோவை - 5.

பெறுநர்

வி. ஜி. பி. நிறுவனத்தினர்,
785, அவினாசி சாலை,
கோவை - 2.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தினமணி நாளிதழில் நேற்று [19. 10. 2020] வந்த தங்கள் விளம்பரம் பார்த்து, எழுத்தர் பணி வேண்டுதல் தொடர்பாக.

வணக்கம். தங்கள் நிறுவனத்தில் எழுத்தராகப் பணியாற்ற யான் பெற்றுள்ள தகுதிகள்.

பிறந்த தேதி, வயது : 01 - 05 - 2002 [18]

கல்வித் தகுதி : 12. ஆம் வகுப்பில் தேர்ச்சி - மதிப்பெண் : 1005/1200
[சான்றிதழ் நகல் இணைக்கப்பட்டுள்ளது]

தட்டச்சு : ஆங்கிலம், தமிழ் மேல்நிலையில் [Higher] தேர்ச்சி.

சுருக்கெழுத்து : ஆங்கிலம் கீழ் நிலையில் [Lower] தேர்ச்சி.

முன் அனுபவம் : காந்திபுரம் தனியார் பள்ளி ஒன்றில் 01. 06. 2020 முதல் எழுத்தராகப் பணியாற்றி வருகிறேன்.

எதிர்பார்க்கும் ஊதியம் : குறைந்த பட்சம் 8000 ரூபாய்

தங்கள் நிறுவனத்தில் எழுத்தராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டால் நான் நல்ல முறையில் பணியாற்றுவேன் என உறுதியளிக்கிறேன்.

நன்றி.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள,
செ. சாதனா.

2. கல்லூரி முதல்வருக்கு மாணவனின் கடிதம்

அனுப்புநர்

தா. பாரதிநேசன்,
இளங்கலை இரண்டாமாண்டு [வரலாறு]
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை - 627 002.

பெறுநர்

முதல்வர் அவர்கள்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை - 627 002.

பெருமதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : விரும்பிய பாடப் பிரிவில் படிக்க அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

வணக்கம். நான் விண்ணப்பித்தபடி எனக்கு வரலாறு வகுப்பில் இடம் தந்தீர்கள். உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. என் தந்தை விருப்பப்படி வரலாறு வகுப்பில் சேர்ந்தேன். ஆனால், அதில் எனக்கு நாட்டம் இல்லை. என் விருப்பப்படி படிக்கத் தந்தை அனுமதித்து விட்டார். எனவே, நீங்கள் அருள் கூர்ந்து தமிழ் இலக்கிய வகுப்பில் சேர அனுமதிக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இடம் : பாளையங்கோட்டை
நாள் : 12 - 07 - 2020

இப்படிக்குத்
தங்கள் உண்மையுள்ள
மாணவன்,
தா. பாரதிநேசன்

## 2. பல்வேறு மடல்கள் [பொதுவான திணை]

1. உம் கல்லூரி இலக்கியமன்ற விழாவில் கலந்து கொள்ள வந்த தமிழ் அறிஞர் ஒருவர்க்கு "வரவேற்பு மடல்".

கோவை அரசு கலைக் கல்லூரியில் இன்று [12.2.2021] நடைபெறுகின்ற பாரதியார் விழாவில் கலந்து கொள்ள எம் கல்லூரி இலக்கிய மன்றத்தின் சார்பில் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, இவ்விழாவில் சிறப்புரை ஆற்ற வந்துள்ள கவிஞர் புவியரசு ஐயா அவர்களே! தங்களுக்கு எம்மன்றத்தின் சார்பில் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

50 ஆண்டுகட்கு மேலாக இலக்கியப் பணியும், பத்திரிகைப் பணியும், தமிழ் வளர்ச்சிப் பணியும் ஆற்றி வருகின்ற தங்கள் மாண்புகளை அறியாதார் இங்கு யாருமில்லை. இருபதாம் நூற்றாண்டின் பிற கவிஞர்களுக்குக் கலங்கரை விளக்கமென விளங்கிய மகாகவி பாரதிக்கு எம் கல்லூரியில் யாம் நடத்தும் விழாவில், தாங்கள் கலந்து கொள்வது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. எனவே! தங்களை இருகரம் கூப்பி வணங்கி "வருக! வருக! சொற்பொழிவில் மாணவர்க்கு பாரதியைப் பற்றிய அரும்பெருங் கருத்துகளை அள்ளித் தருக! தருக" என வேண்டுவதோடு.

"தங்கள் தமிழ்ப்பணி தொடர்க! தொடர்க!" என வாழ்த்தி, "அதற்கு வேண்டிய உடல் நலத்தினையும் உள நலத்தினையும் தங்களுக்கு அருள்க! அருள்க!" என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்

கல்லூரி இலக்கிய மன்றத்தினர்.

# வினாக்கள்

பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி :

1. பாரதியும் கண்ணகியும் சந்தித்து உரையாடுவதாகக் கற்பனையுரை தயாரிக்க.
2. வாலியாரும் பெரியாரும் சந்தித்து உரையாடுவதாகக் கற்பனையுரை எழுதுக.
3. கட்டபொம்மனும் ஜாக்சன் துரையும் " கற்பனைச் சந்திப்பாக்குக.
4. போக்குவரத்து வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.
5. பண்டிகைக் காலத்தில் சொந்த ஊருக்குப் போகப் பயணச்சீட்டுக் கிடைக்காத நெருக்கடியை எழுதுக.
6. எதிர்பாரா விதமாக விருந்தினர் வந்துவிட்டால் வீட்டில் ஏற்படும் நெருக்கடி நிலையை எடுத்துரைக்க.
7. நோய்த் தொற்று பரவும் நெருக்கடியான சூழலை நீ எவ்வாறு திறமையாகக் கையாள்வாய் என்பது குறித்து எடுத்துரைக்க.
8 மாற்றுச் சான்றிதழ் மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ் வேண்டி நும் கல்லூரி முதல்வருக்குக் கடிதம் வரைக.
9 உங்கள் ஊருக்குப் பொது நூலகம் வேண்டி உரிய அலுவலருக்குக் கடிதம் வரைக.
10 தெரு விளக்குகளின் பழுது நீக்குமாறு புகார் மடல் எழுதுக.
11. புயல் நிவாரணம் வழங்கிய அமைச்சருக்கு நன்றியுரை எழுதுக.
12. ஆண்டு விழாவிற்கு வந்துள்ள சிறப்பு விருந்தினர்க்கு வரவேற்புரை வரைக.
13. விருது பெற்ற திரைப்பட நடிகரைப் பாராட்டி எழுதுக.
14. உலகின் சிறப்புத் தலைவர்களை வாழ்த்தி விரிவான மடல் எழுதுக.
15. நும் ஆசிரியருக்கு விருது வழங்கியமைக்காக இந்தியக் குடியரசுத் தலைவருக்கு நீண்ட நன்றி மடல் வரைக.